O.S.No. 97/2023 நாள் 23.07.2026 PW 2 – திருமதி. தனலெட்சுமி

(சாட்சி மீண்டும் உதவியாளரால் பிரமாணம் செய்யப்பட்டு அனுமதியின்பேரில் தொடர்ந்து குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்.)

குறுக்குவிசாரணை (பிரதிவாதிதரப்பில்)

நான் வேலை பார்க்கிறேனா என்றால் இல்லை. இல்லத்தரசியாக இருக்கிறேன். எனது கணவர் மாற்றுதிறனாளி என்றால் சரிதான். எத்தனை வருடமாக வீட்டிலேயே மற்றவரின் உதவியுடன் இருக்கிறார் என்றால் கொரனா காலத்திற்கு பிறகு 2020 ஆம் வருடம் முதல் இருக்கிறார். அதன்பிறகு எனது கணவர் எந்தவிதமான வேலைக்கும் போகவில்லை என்றால் சரிதான். ஆனந்தராஜை எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் எனக்கு பழக்கம் கிடையாது, எனது கணவருக்கு பழக்கம். பிரதிவாதி சிறு சிறு கடன்பெற்று நேரடியாக செலுத்தியுள்ளார் என்று சொல்லியுள்ளநிலையில் அது பற்றி எனக்கு நேரடியாக எவ்வளவு கடன் பெற்று எவ்வளவு திருப்பி கொடுத்தார் என்று தெரியாது என்றால் சரிதான். எனது கணவரும், அவரும்தான் பேசிக்கொள்வார்கள். சின்ன சின்ன தொகையாக வாங்கும்போது புரோநோட், செக் வாங்கிய விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சம்மந்தமாக பிரதிவாதியால் கொடுக்கப்பட்ட புரோநோட், மற்றும் எனது கணவர் பிரதிவாதிக்கு கொடுத்த தொகை சம்மந்தமாக தெரியுமா என்றால் தெரியும். எந்த தேதியில் எவ்வளவு கொடுத்தார் என்றால் ஜனவரி 29 ஆம் தேதி ரூ.7,00,000/–மும், பிப்ரவரி 18 ல் ரூ.3,00,000/–மும் கொடுத்தார். மேற்படி ரூ.10,00,000/– எனது கணவர் வேலையில்லாமல் வீட்டில் இருந்த நிலையில் மேற்படி தொகையை நகையை அடமானம் வைத்து கொடுத்தாரா, வங்கியிலிருந்து எடுத்து கொடுத்தாரா என்றால் நகையை அடமானம் வைத்து வீடு கட்டுவதற்காக வைத்திருந்த தொகையை பிரதிவாதி கேட்டதால் கொடுத்தோம். நாங்கள் எந்த தேதியில் நகையை வங்கியில் அடமானம்

வைத்தேன் என்றால் சில வருடங்கள் ஆகிவிட்டதால் தேதி தெரியவில்லை. எந்த வங்கியில் அடமானம் வைத்தேன் என்றால் கனரா வங்கியில் கொஞ்சமும், ஸ்டேட் பேங்கில் கொஞ்சமும் வைத்தேன். பிரதிவாதி கடன் கேட்ட சமயத்தில்தான் நான் நகையை அடமானம் வைத்தேனா என்றால் இல்லை, நாங்கள் வீடுகட்டுவதற்காக அடமானம் வைத்து பணம் வைத்திருந்தேன். நான் எனது கனரா வங்கி மற்றும் ஸ்டேட் வங்கியின் கணக்கு பட்டியலை தாக்கல் செய்தால் நான் நகைகளை அடமானம் வைத்து தொகையை பெற்ற விவரம் தெரியவரும் என்றால் சரிதான். பிரதிவாதி மேற்படி தொகைக்கு எவ்வளவு மாதம் எவ்வளவு வட்டி கொடுத்தார் என்று தெரியுமா என்றால் 1 ½ சதவீத வட்டி கொடுத்தார், எவ்வளவு மாதம்கொடுத்தார் என்று தெரியாது. 1 ½ சதவீத வட்டி என்றால் எவ்வளவு என்றால் மாதம் ரூ.15,000/-. பிரதிவாதியிடமிருந்து இந்த கடனுக்காக புரோநோட் தவிர வேறு என்ன ஆவணங்கள் வாங்கினார் என்று நேரடியாக தெரியுமா என்றால் நேரடியாக தெரியாது, எனது கணவர் பிரதிவாதி அவரது எஸ்ஆர் புக், மற்றும் சொத்தின் அசல் பத்திரத்தை கொடுத்தார். மேற்படி சொத்து எந்த சர்வே எண், எவ்வளவு விஸ்தீரணம் என்று தெரியுமா என்றால் தெரியாது. அந்த சொத்து யார் பெயரில் உள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. எனது கணவருக்கும், பிரதிவாதிக்கும் எவ்வளவு வருமாக பண போக்குவரத்து இருந்தது என்றால் தினமும் வீட்டிற்கு வருவார், பேசிக்கொண்டிருப்பார்கள். பணபோக்குவரத்து பற்றி குறிப்பிட்டு தெரியாது. பிரதிவாதி தினமும் வீட்டிற்கு வருவார் என்ற விவரத்தை பிரமாணவாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி எனது கணவர் மீது புகார் மனு கொடுத்து அதன் விசாரணைக்கு எனது கணவர் காவல்நிலையம் ஆஜரானார் என்றால் எனது கணவர் கீழே இருந்தார், நான்தான் மேலே

சென்றேன். அந்த விசாரணையில் எஸ்ஆர் புக்கை ஒப்படைக்க வேண்டும் என்று சொன்னார்கள் என்றால் சரிதான். அந்த விசாரணையில் பிரதிவாதி எவ்வளவு தொகை தர வேண்டும் என்று நான் வாக்குமூலம் கொடுத்தேனா என்றால் நினைவில்லை. வா.சா.ஆ–1 புரோநோட்டை யார் நிரப்பினார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. நான் எந்த தேதியில் சாட்சியாக கையொப்பம் செய்தேன் என்றால் பணம் வாங்கிய அன்று கையெழுத்து போட்டேன், ஆனால் தேதி தெரியவில்லை. 1வது சாட்சியாக யார் கையெழுத்து செய்தார் என்றால் பிரதிவாதியின் மனைவி. அவர் எங்கள் வீட்டிற்கு வந்து கையெழுத்து போடவில்லை என்றால் எங்கள் வீட்டில் வைத்துதான் கையெழுத்து போட்டார். வா.சா.ஆ–1 புரோநோட்டை யார் வாங்கி வந்தார் என்றால் தெரியாது. அதில் ஒட்டப்பட்ட ஸ்டாம்ப் யார் வாங்கிவந்தார் என்றால் தெரியாது. வா.சா.ஆ–1 புரோநோட்டில் என்ன சங்கதி எழுதியிருந்தது என்றால் அப்போது படித்திருந்தேன், தற்போது ஞாபகமில்லை. பிரதிவாதியும், அவரது மனைவியும் எங்களிடம் கடன் வாங்கும்போது எங்கு குடியிருந்தார்கள் என்றால் வட்டகோவில் பக்கத்தில் சேதுபாதை ரோட்டில் குடியிருந்தார்கள். வாதி எனது கணவர் என்பதால் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.